# கோமரன்கடவல பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஜனவரி 07 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஜனவரி 17 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஏப்ரல் 17 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கோமரன்கடவல பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கோமரன்கடவல பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

(i) நிலையான சொத்துக்களின் பொருட்டு மீளளிப்பு ஒதுக்கம் உருவாக்கப்பட வில்லை.

(ii) வருவாய் மற்றும் செலவினம் சேர்ந்து நின்ற அடிப்படையில் கணக்கிலிடப்பட்டதற்கான அடிப்படை வெளிக்கொணரப்படவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ). பொதுப் பேரேடு பேணப்படவில்லலை.

(ஆ). வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் (NELSIP) கீழ் பெறப்பட்ட தொகையில் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டு மீதி ரூபா 27,080,711 ஆகும். இது நிதிசார் கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

(இ). ஐந்தொகையில் காட்டப்பட்ட ஊழியர் கடன் மீதியாகிய ரூபா 1,092,242 கடன் பதிவேட்டின்படி ரூபா 1,027,015 ஆகும். அதற்கமைய, நிதிசார் கூற்றுக்களில் ரூபா 65,227 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) செலவினத்தைக் கணக்கிலிடுகையில் 21 கணக்கீட்டு மீதிகளில் ரூபாா 2,972,848 கூட்டுத்தொகையுடைய வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(உ) இறுதிக் கணக்குகளில் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புகளாக ரூபா 8,315 காட்டப்பட்டபோதும், திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்களுக்கான பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) முற்பண மீதியாகிய ரூபா 599,165 நிதிசார் கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

(எ) 2008 முதல் 2011 வரை ஐந்தொகையில் முற்கொடுப்பனவுகளாக ரூபா 130,621 குறிப்பிடப்பட்டபோதும் கணக்காய்வில் சரி, பிழை பார்த்தலின் பொருட்டு விளக்கமான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஏ) திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு மீதியில் ரூபா 97,550 வித்தியாசம் நிலவியது.

(ஒ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிருப்புப் பெறுமதி ரூபா 18,150 ஆகக் கணக்குகளில் காட்டப்பட்டபோதும், கையிருப்புப் பதிவேடு ஒன்று பேணப்பட வில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 27,518,515 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டில் கல்யாணபுர மதகை நிர்மாணிப்பதற்காக 02 ஆம் இலக்க உறுதிச்சான்று மூலம் கல்யாணபுர கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ரூபா 53,420 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வேலைக்கான கோவை இதுவரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை.

(இ) வடக்கு கிழக்கு மாகாண சேவைகள் மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் (NELSIP) கீழ் கோமரன்கடவல வாரச் சந்தையை நிர்மாணிப்பதற்காக 2011 டிசெம்பர் 30 ஆந் திகதியன்று ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 958,443 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், குறித்த கொடுப்பனவிற்கான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 79,374 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,249,818 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

முப்பத்து நான்கு கணக்கீட்டு விடயங்களில் ரூபா 672,571 சய பெறுமதி தொடக்கம் ரூபா 20,000,000 சக பெறுமதி வரையிலான வேறுபாடு காணப்பட்டன. அதற்கமைய

வருடாந்த வரவு, செலவுத் திட்டம் முறையான நிதிசார் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மீளாய்வாண்டினது மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 350 | 253 | 97 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 31 | 28.4 | 2.6 |
| (iii) | பிற வருவாய் | 4,989 | 1,440 | 3,549 |

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்து முகாமைத்துவம்

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) கணக்கீடு